சுருக்கம்

பாசனம் – சேலம் மாவட்டம், மேட்டூர் அணை – 2010–11 ஆண்டு – காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து 28.7.2010 மாலை 6.00 மணி முதல் தண்ணீர் திறந்து விடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (என்1) துறை

அரசாணை (நிலை) எண் 223 நாள் 23.07.2010.
திருவள்ளுவர் ஆண்டு 2041
ஆடி 7

படிக்கப்பட்டது:

1. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம் கடித எண் 314/அரசு/இபொ2/கோ38/10, நாள் 28.6.2010.
2. அரசு ஆலோசகர் (நீர்வளம்), நீர்வள ஆதாரத்துறை, சென்னை கடித எண் CTC/CAU/Advisor/WR1/2010-1, நாள் 20.7.2010.

------

ஆணை:

மேலே பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசு ஆலோசகர் (நீர்வளம்) பரிந்துரைத்துள்ளதன் அடிப்படையில், 2010–11ஆம் ஆண்டு காவிரி டெல்டா பாசனத்திற்காக சேலம் மாவட்டம், மேட்டூர் அணையிலிருந்து 28.7.2010 அன்று மாலை 6.00 மணி முதல் தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிடுகிறது.

2. இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கையினை, 24.07.2010 அன்று தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடுமாறு பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை அவர்கள் பணிக்கப்படுகிறார்.

3. இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கையினை மாவட்ட அரசிதழில் உடனடியாக வெளியிடுமாறு திருச்சிராப்பள்ளி, அரியலூர், கரூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், சேலம், நாமக்கல், புதுக்கோட்டை, ஈரோடு மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் பணிக்கப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–79.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம், திருச்சி–20.
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5.

அரசு ஆலோசகர் (நீர்வளம்), நீர்வள ஆதாரத்துறை, சென்னை–8.
மாவட்ட ஆட்சித்தலைவர்கள், திருச்சிராப்பள்ளி, அரியலூர், கரூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், சேலம், நாமக்கல், புதுக்கோட்டை, ஈரோடு மற்றும் கடலூர்.
முதன்மைச் செயலாளர் மற்றும் நிலநிர்வாக ஆணையர், சென்னை–5.
ஆணையர், வேளாண்மைத் துறை, சென்னை–5.

நகல்:–
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9.
அரசுச் செயலாளர், வேளாண்மைத் துறை, சென்னை–9.
அனைத்து பாசனப் பிரிவுகள், பொதுப்பணித்துறை, சென்னை–9.
இ.கோ/உந.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

கு. பவானி 23/7/2020

பிரிவு அலுவலர்

2 23/7/20

(G.O. (Ms) No 223, Public Works (N1) Department, dated 23.07.2010)

## NOTIFICATION

The Mettur Dam will be opened on 28.7.2010 at 6.00 P.M. for Cauvery Delta Irrigation during the year of 2010 – 2011. There will not be supply of water beyond the prescribed date of 28.1.2011.

2. The ryots of Cauvery Delta region are requested to use the water economically and co-operate with Water Resources Department officials in proper distribution and efficient utilization of available water. If necessary, turn system will be introduced.

23/7/10

(S. Ramasundaram)
Principal Secretary to Government

(அரசாணை (நிலை) எண் 223, பொதுப்பணித் (என்1) துறை, நாள் 23.07.2010)

## அறிவிக்கை

2010–2011ஆம் ஆண்டு காவிரி டெல்டா பாசனத்திற்காக 28.7.2010 அன்று மாலை 6.00 மணி முதல் சேலம் மாவட்டம் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட தேதியான 28.1.2011க்குப் பிறகு தண்ணீர் வழங்கப்பட மாட்டாது.

2. காவிரி டெல்டா விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி நீர்பங்கீட்டில் நீர்வள ஆதாரத்துறை அலுவலர்களுடன் ஒத்துழைத்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தேவை ஏற்பட்டால் பாசனத்திற்கு முறை வைத்து தண்ணீர் விடப்படும்.

(சு. இராமசுந்தரம்)
அரசு முதன்மைச் செயலாளர்